முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**IDOP No. 07/2025**

**நாள்.06.02.2026**

ம.சா.1 திரு.அற்புததாஸ் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் 7 வருடம் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். எங்கள் காதல் திருமணத்திற்கு என் வீட்டில் பல எதிர்ப்புகள் வந்தது என்றும், அதனை சமன்செய்து பின்னர்தான் திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 புகைப்படமானது எங்கள் நிச்சயதார்த்தம் அன்று எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் சரிதான். ஆனால் எனது நிரூபண வாக்குமூலத்தில் அந்த புகைப்படத்தில் எங்கள் திருமணத்தின்போது எடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி நான் 21.11.2024 ம் தேதி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 பதிவு சான்றிதழ் மனு தாக்கல் செய்வதற்கு முதல்நாள் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 எண்ணில் எந்த வித வரிசை எண்ணும் இல்லை என்றால் சரிதான்.

நான் சிங்கப்பூரில் வேலை செய்ததாக சொல்லும் சமயத்தில் எவ்வளவு சம்பளம் வாங்கி வந்தேன் என்றால் மாதம் ரூ.30000/- வாங்கி வந்தேன். திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் 30 பவுன் தங்க நகை மற்றும் 2 லட்சம் மதிப்புள்ள சீர் பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் அது எதிர்மனுதாரருக்குத்தான் தெரியும். அதனை நான் நிறுத்திப்பார்க்கவில்லை. இருசக்கர வாகனம் வாங்குவதற்கு ரூ.80000/- பணம் கொடுத்தார்கள் என்றால் பணத்தை எதிர்மனுதாரரிடம் தான் கொடுத்தார்கள். இருசக்கர வாகனம் அவர் பெயரில்தான் உள்ளது.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.06 15:55:51 +0530

எனது சகோதரி அருள்சவுரியம்மாள் தற்போது எங்களுடன்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். திருமணம் ஆன 3 மாதத்தில் என் தாயார் எதிர்மனுதாரரை வீட்டில் வைத்து பூட்டியதாக திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் பொய் புகார் கொடுத்துள்ளார். எனக்கு சொந்தமாக ஒரு தார்சு வீடும், ஒரு ஓட்டு வீடும் உள்ளன என்றால் அவை என் அப்பாவிற்கு சொந்தமானவை. திருமணம் ஆன சிறிது நாட்கள் அந்த தார்சு வீட்டில்தான் நானும் எதிர்மனுதாரரும் குடும்பம் நடத்தி வந்தோம் என்றால் எதிர்மனுதாரரின் டார்சர் தாங்க முடியாமல் அந்த வீட்டில் தனிக்குடுத்தனம் நடத்தி வந்தோம். அந்த தார்சு வீட்டில் மின்வசதி, கதவு போன்ற அத்தியாவசிய தேவைகளை தற்போதுதான் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அப்போதே அந்த வசதிகள் இருந்தன.

என் மகனுக்கு மொட்டை போட்ட விவரம் எனக்குத் தெரியும் என்றால் அதை அவர்கள் எனக்கு சொல்லவே இல்லை. எதிர்மனுதாரரின் வீடானது எங்கள் வீட்டிலிருந்து 4–5 வீடுகள் தள்ளி உள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து, இராமநாதபுரம் ரமேஷ் மருத்துவமனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. திருமணம் முடித்து நான் எப்போது வெளிநாட்டிற்கு சென்றேன் என்றால் மார்ச் 2022 ல் வெளிநாட்டிற்கு சென்றேன். நான் வெளிநாட்டிற்கு சென்றபோது என் மனைவியிடம் சொல்லாமல் போனேன் என்றால் சரியல்ல, சொல்லிவிட்டுத்தான் சென்றேன். வெளிநாட்டில் இருந்து என் மனைவிக்கு பணம் அனுப்பியதை காண்பிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2024 ம் ஆண்டு எதிர்மனுதாரர் திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்னுடன் சேர்ந்து வாழ வைக்க வேண்டும் என்று புகார் கொடுத்தார் என்றால் பொய்யான விவரங்கள் சொல்லி புகார் கொடுத்தார். அந்த



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.06 15:55:54 +0530

புகாரின் பேரில் அஜராகி என் மனைவியை நான் நல்ல முறையில் 20 நாட்களில் சேர்த்து வாழவைக்கிறேன் என்று சொன்னேன் என்றால் சரிதான். ஆனால் 20 நாட்களில் நான் வாழ வைக்காததால் ஊரில் உள்ள தேவாலயத்தில் பாதிரியாரிடம் எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் இல்லை.

நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று, காவல் நிலையத்திலோ, தேவாலயத்திலோ, நீதிமன்றத்திலோ மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எந்த தேதி முதல் நான் என் மனைவி மற்றும் குழந்தைகளிடமிருந்து பிரிந்து இருக்கிறேன் என்றால் 2024ம் ஆண்டு முதல் பிரிந்து இருக்கிறேன். நான் பிரிந்தது முதல் இது நாள் வரை என் மனைவிக்கோ குழந்தைக்கோ செலவுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், என் மகனுக்கு பணம் கொடுத்தேன், ஆனால் என் மனைவி வாங்க மறுத்துவிட்டார். என் மகன் எந்த பள்ளியில் எந்த வகுப்பு படிக்கிறார் என்றால் திருவெற்றியூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் UKG படிக்கிறான். அந்த குழந்தையின் படிப்பு செலவுகளை எதிர்மனுதாரர்தான் செய்து வருகிறார் என்றால் கூட இருந்தவரை நான் செலவு செய்தேன், தற்போது செய்யவில்லை.

தற்போது வரை என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்து வருகிறார் என்றும், நான்தான் அதை தவிர்த்து வருகிறேன் என்றால் அவர் எனக்கு மன நிம்மதியை கொடுக்கவில்லை. என்னால் அவருடன் வாழ முடியவில்லை. நான் மனுவில் எந்த நிகழ்வையும் குறிப்பிட்டு கூறாததால் அதன் அடிப்படையில் விவகாரத்து வழங்க முடியாது என்றாலும், மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.06 15:55:57 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .